டிஜிட்டல் டெய்லி
அக்ரி-டாக்டர்
agridoctor.in

கல்யாண்
ஜு வ ல் ல ர் ஸ்

agridoctor.in | 11.10.2026 ஞாயிற்றுக்கிழமை | பக்கங்கள் 27 | RNI No.TNTAM/2012/49602 | Vol.14, Issue : 095 | Madurai | Online Edition

# தமிழகத்தில் வடகிழக்குப் பருவமழை அக்.17ம் தேதி தொடங்க வாய்ப்பு!

சென்னை, அக்.10

தமிழகத்தில் அக்.17-ம் தேதி, வடகிழக்கு பருவமழை தொடங்க வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

தமிழகத்தில் தென்மேற்குப் பருவமழை 20 சதவீதம் குறைவாக பெய்துள்ளது. கடந்த ஏப்ரல் முதலே கடும் வெயில் வாட்டி வதைத்து வருகிறது. இதனால் பல்வேறு நீர்த்தேக்கங்கள், ஏரிகளில் நீர் மட்டம் வெகுவாக குறைந்து வருகிறது. சென்னைக்கு குடிநீர் வழங்கும் புழல், செம்பரம்பாக்கம், பூண்டி, வீராணம் உள்ளிட்ட ஏரிகளின் மொத்த கொள்ளளவு 13,222 மில்லியன் கனஅடி. ஆனால் தற்போது 4,730 மில்லியன் கனஅடி மட்டுமே நீர் இருப்பு உள்ளது. தமிழகம் முழுவதும் நீர் தேவையை பூர்த்தி செய்ய வடகிழக்குப் பருவமழையை எதிர்நோக்கி காத்திருக்கிறது.

நாட்டில் தென்மேற்குப் பருவமழை விலகி வருகிறது. ஏற்கெனவே உத்தரப் பிரதேசம், மத்திய பிரதேசம், குஜராத், ராஜஸ்தான் உள்ளிட்ட பகுதிகளில் விலகிவிட்டது. தற்போது மகாராஷ்டிரா, ஜார்க்கண்ட், சத்தீஸ்கர், கர்நாடகா, தெலங்கானா, ஒடிசாவின் சில பகுதிகளில் தென்மேற்கு பருவமழை விலகி வருகிறது.

இது தொடர்பாக வானிலை ஆய்வு மைய அதிகாரிகள் தெரிவித்த தாவது, அந்தமான் கடல் பகுதியில் அக்.11-ம் தேதி (இன்று) வளி மண்டல மேலடுக்கு சுழற்சி உருவாக வாய்ப்பு உள்ளது. இதன் தாக் கத்தால் தென்கிழக்கு வங்கக்கடல் பகுதியில் ஒரு புதிய காற்றழுத்த தாழ்வுப் பகுதி உருவாக வாய்ப்பு உள்ளது. இது மேலும் வலுப்பெற்று அதற்கடுத்து வரும் 4 நாட்களில் வட தமிழகம் மற்றும் தெற்கு ஆந்திரக் கடலோரப் பகுதிகளை நெருங்கும். இது புயலாக வலுப் பெற வாய்ப்பு இல்லை. இந்த காற்றழுத்த தாழ்வுப் பகுதியால் காற்று வீசும் திசையில் மாற்றம் ஏற்பட்டு, பின்னர் 17-ம் தேதி வடகிழக்கில் இருந்து தமிழகம் நோக்கி காற்று வீசும். அதுமுதல் வடகிழக்குப் பருவமழை தொடங்கும். இவ்வாறு அதிகாரிகள் கூறினர்.

# கத்திரியில் ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மை : விவசாயிகளுக்கு செயல்விளக்கம்



புதுக்கோட்டை, அக்.10

புதுக்கோட்டை மாவட்டம், வம்பன் வேளாண்மை அறிவியல் நிலையத்தில் கத்திரியில் ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மை குறித்த செயல் விளக்க நிகழ்ச்சி மற்றும் இடுபொருள் விநியோகம் 07.10.26 அன்று நடைபெற்றது.

நிகழ்ச்சியில் வேளாண்மை அறிவியல் நிலையத்தின் முதுநிலை விஞ்ஞானி மற்றும் தலைவர் முனைவர் மு.தமிழ்ச் செல்வன் (தோட்டக்கலை) காய்கறிப் பயிரான கத்திரி சாகுபடியின் முக்கியத்துவம், கத்திரிப் பயிரில் தோன்றும் முக்கிய பூச்சிகள் மற்றும் அவற்றால் ஏற்படும் பாதிப்புகள் குறித்து விவசாயி களுக்கு விளக்கினார்.

முனைவர் இராம்ஜெகதீஷ் (பயிர் நோயியல்) கத்திரிப் பயிரில் தோன்றும் பூச்சிகளை வயல்வெளியில் கண்டறியும் முறைகள், அவற்றை ஒருங்கிணைந்த முறையில் கட்டுப்படுத்தும் வழிமுறைகள் மற்றும் குருத்து மற்றும் காய்த்துளைப்பானைக் கட்டுப்படுத்துவதில் இனக்கவர்ச்சிப் பொறியின் பயன்பாடு குறித்து விவசாயிகளுக்கு செயல்விளக்கம் அளித்தார்.

இதனைத் தொடர்ந்து, கத்திரியில் குருத்து மற்றும் காய்த் துளைப்பான்களைக் கட்டுப்படுத்துவதற்கான இனக்கவர்ச்சிப் பொறிகள் மற்றும் இதர பூச்சிகளைக் கட்டுப்படுத்துவதற்கான பூச்சிக்கொல்லி மருந்துகள் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டன.

மேலும், ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மை முறைகளை முறையாகக் கடைப்பிடித்து, பூச்சிகளின் தாக்கத்தைக் குறைத்து தரமான மகசூலைப் பெறுமாறு விவசாயிகளுக்கு அறிவுறுத்தப் பட்டது. இந்த ஏற்பாடுகளை தே.அமுல்ராஜ், திட்ட உதவியாளர் (கணினி) சிறப்பாக செய்திருந்தார்.

agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

# பட்டியலின பயனாளிகளுக்கு திறன் மேம்பாட்டு பயிற்சி

விழுப்புரம், அக்.10

ICAR வேளாண் அறிவியல் நிலையம் (விழுப்புரம் II), கள்ளக்குறிச்சி மற்றும் கடல் பொருட்கள் ஏற்றுமதி மேம்பாட்டு ஆணையம் (MPEDA) இணைந்து, பட்டியலின மீனவர்கள், மீன் பண்ணைத் தொழிலாளர்கள், பதப்படுத்துபவர்கள் மற்றும் மீன் விற்பனையாளர்களுக்கான திறன் மேம்பாட்டு பயிற்சியை அக்டோபர் 7 மற்றும் 8 ஆகிய தேதிகளில் வேளாண் அறிவியல் நிலையத்தில் நடத்தினர். இரண்டு தொகுதிகளாக நடைபெற்ற இப்பயிற்சியில் மொத்தம் 60 பயனாளிகள் பங்கேற்றனர்.

வேளாண் அறிவியல் நிலையத்தின் இணைப் பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் மொ.ச. கண்ணதாசன் தலைமை வகித்தார். கடல் பொருட்கள் ஏற்றுமதி மேம்பாட்டு ஆணையத்தின் (MPEDA) துணை இயக்குநர் அறிவுக்கரசு சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டார்.

வேளாண் அறிவியல் நிலையத்தின் மீன்வளத் தொழில்நுட்ப வல்லுனர் சே.தாவூத் இப்ராஹிம், நிலையான மீன்பிடி நடைமுறைகள், மீன் உற்பத்தி, சுகாதாரமான கையாளுதல் மற்றும் கடல் உணவுப் பொருட்கள் ஏற்றுமதி குறித்து தொழில்நுட்பப் பயிற்சி வழங்கினார்.

## மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!




அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.

அக்ரி-டாக்டர்
agridoctor.in Agri Digital daily

KALYAN
JEWELLERS

# எல்லா நாளும் தள்ளுபடி உண்டு உங்களுக்கு மட்டும்

## சிறப்புச்சலுகை



கல்யாண் ஜுவல்லர்ஸ்-ல் நகை எடுக்க வரும்போது **அக்ரி டாக்டர் வாசகர்** என்று அறிமுகப் படுத்திக் கொண்டு சிறப்பான சேவையையும், பிரத்யேக தள்ளுபடியும் பெறுங்கள். இந்த தள்ளுபடி உங்களுக்கு மட்டுமே அதுவும் எல்லா நாட்களிலும்.

குறிப்பு: அதிகார பூர்வமாக கல்யாண் ஜுவல்லர்ஸ் தள்ளுபடி அறிவிக்கும் நாட்களில் அந்த தள்ளுபடி மட்டும் செல்லுபடியாகும்.மேலும் உதவி தேவை எனில் கடையில் இருந்தே எங்களை தொடர்பு கொள்ளுங்கள்.

96331 42000, 86104 71220. 73558 87778, 99408 27084, 80563 05483

# மரவள்ளிக்கிழங்கு சாகுபடியில் அறிவியல் தொழில்நுட்பங்கள் குறித்த இலவசப் பயிற்சி

விழுப்புரம், அக்.10

இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகத்தின் கீழ் இயங்கும் வேளாண் அறிவியல் மையம், கள்ளசமுத்திரத்தில், 09.10.26 அன்று மரவள்ளிக்கிழங்கு உற்பத்திக்கான அறிவியல் சாகுபடி தொழில்நுட்பங்கள் என்ற தலைப்பில் இலவச வளாகப் பயிற்சி நடைபெற்றது. பயிற்சியின் நோக்கம், மரவள்ளிக்கிழங்கு சாகுபடியில் நவீன தொழில்நுட்பங்கள், மேம்பட்ட பயிர் மேலாண்மை முறைகள் மற்றும் நிலையான உற்பத்தி உத்திகள் குறித்து விவசாயிகளுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்துவதாகும்.



இப்பயிற்சி முனைவர் மு.வேல்முருகன், பேராசிரியர் (தோட்டக்கலை), மரவள்ளி மற்றும் ஆமணக்கு ஆராய்ச்சி நிலையம், ஏத்தாப்பூர், தலைமையில், வேளாண் அறிவியல் நிலையத்தின் இணைப் பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் மொ.ச.கண்ணதாசன், முன்னிலையில் நடைபெற்றது. முனைவர் த. தீபிகா கிருஷ்ணவேணி, தொழில்நுட்ப வல்லுநர் (தோட்டக்கலை), பயிற்சியை ஒருங்கிணைத்து, வரவேற்புரை வழங்கியதுடன், பயிற்சித் திட்டத்தின் நோக்கங்கள் குறித்தும் எடுத்துரைத்தார்.

பயிற்சியின் தொழில்நுட்ப அமர்வுகளில், மரவள்ளிக்கிழங்கின் அறிவியல் சாகுபடி முறைகள், இயற்கை வேளாண்மை, ஊட்டச்சத்து மேலாண்மை, களை மேலாண்மை மற்றும் உயிர் உரங்களின் பயன்பாடு ஆகியவை குறித்து விளக்கமளிக்கப் பட்டது.

மேலும், மரவள்ளிக்கிழங்கில் மதிப்புக்கூட்டல், அதன் உபபொருட்களை மாற்றுத் தீவன ஆதாரமாகப் பயன்படுத்துதல் மற்றும் மீன் வளர்ப்புடன் ஒருங்கிணைந்த மரவள்ளிக்கிழங்கு சாகுபடி முறைகள் குறித்தும், மகேஸ்வரன், மங்களா தேவி, வினோத், லாவண்யா, தாவூத் இப்ராஹிம் உள்ளிட்ட பிற தொழில்நுட்ப வல்லுநர்களால் பயிற்சி அளிக்கப்பட்டது. தனசேகர், உதவி தோட்டக்கலை அலுவலர், அரசின் தோட்டக் கலைத் திட்டங்கள் மற்றும் விவசாயிகளுக்குக் கிடைக்கும் உதவிகள் குறித்து சிறப்புரையாற்றினார்.

முனைவர் மு.வேல்முருகன், பேராசிரியர் (தோட்டக்கலை), மரவள்ளி மற்றும் ஆமணக்கு ஆராய்ச்சி நிலையம், ஏத்தாப்பூர், சேலம் மாவட்டம், மரவள்ளிக்கிழங்கின் மேம்பட்ட சாகுபடி தொழில்நுட்பங்கள் மற்றும் உற்பத்தித் திறனை அதிகரிப்பதற்கான அறிவியல் அணுகுமுறைகள் குறித்து சிறப்புச் சொற்பொழிவாற்றினார்.

மேலும், வேளாண் அறிவியல் மையத்தின் மரவள்ளிக்கிழங்கு சாகுபடிப் பண்ணையில் களப்பார்வை மற்றும் செயல்விளக்கம் நடைபெற்றது. இதன் மூலம் 27 விவசாயிகள் சாகுபடி முறைகளை நேரடியாகக் கண்டு நடைமுறை அறிவைப் பெற்றனர்.

தொடர்ந்து, மையத்தின் செயல்விளக்க அலகுகளைப் பார்வையிடும் வகையில் வளாகச் சுற்றுப்பார்வையும் ஏற்பாடு செய்யப்பட்டது. இப்பயிற்சி, மரவள்ளிக்கிழங்கு சாகுபடியில் அறிவியல் தொழில்நுட்பங்களைப் பின்பற்றுதல், வளங்களைத் திறம்படப் பயன்படுத்துதல், உற்பத்தித் திறனை மேம்படுத்துதல் மற்றும் விவசாயிகளின் வருமானத்தை உயர்த்துதல் ஆகிய வற்றுக்கு உதவும் வகையில் அமைந்தது.

**மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!**



# விசித்திரமான வண்டுகள் உலகம்

சிறிய உடலுக்குள் ஒளிந்திருக்கும் பிரம்மாண்ட அதிசயங்கள்!
சின்னஞ்சிறு வண்டுகளே, இயற்கையின் விந்தைகளே!
சிறிய உடலுக்குள் அறிவியல் சுமக்கும் அதிசயங்களே!
வண்ணச் சிறகில் வானவில்லை வரையும் கலைஞர்களே!

கடினக் கவசம் அணிந்து நடக்கும் வீரர்களே!
தன் எடையை மிஞ்சிய சுமையையும் தூக்கும் வலிமையாளர்களே!
சாணத்தைக் கூட வளமாக்கும் மறுசுழற்சி மன்னர்களே!
மண்ணின் வளத்தைக் காக்கும் மௌனத் தொழிலாளர்களே!

பயிர்களின் எதிரிகளைக் கட்டுப்படுத்தும் இயற்கைக் காவலர்களே!
பொன்வண்ண உடலில் ஒளியைச் சிதறடிக்கும் நகைகளே!
இருளில் ஒளி மொழியால் செய்தி சொல்லும் மின்மினிகளே!
எதிரி வந்தால் புதுமையான தற்காப்புத் திறன் காட்டுபவர்களே!

வாசனையாலும் அதிர்வாலும் தகவல் பரிமாறுபவர்களே!
முட்டை முதல் வண்டுவரை உருமாற்றம் காணும் விந்தைகளே!
இயற்கையின் பாடங்களை மனிதனுக்குக் கற்பிக்கும் ஆசான்களே!
உங்கள் உடலமைப்பில் ஒளிந்திருக்கிறது புதுத் தொழில்நுட்பம்!





# வண்டுகளின் உலகம்

## 15 கவிதைகள்

**சிறிய உடலுக்குள் ஒளிந்திருக்கும் பிரம்மாண்ட அதிசயங்கள்!**



### 1 சிறிய உடல்... பெரிய உலகம்!

சிறு கால்களில் சுற்றித் திரியும்
சின்னஞ்சிறு வண்டே!
உன் உடலுக்குள் ஒளிந்திருப்பது
ஒரு உலகமா? ...
கண்ணுக்குச் சிறியது...
கற்பனைக்கு எட்டாதது!



பொறி வண்டு (Ladybird)

### 2 வண்ணங்களின் வண்டு உலகம்

கருமை முதல் தங்கம் வரை...
இயற்கையின் வண்ணத் தூரிகையில்
உருவான வண்டுகள்!
அழகு மட்டும் அல்ல...
அது தற்காப்பின் மொழி!



பொன்வண்டு (Jewel Beetle)

### 3 கவச வீரர்கள்

ஆறு கால்கள்... இரண்டு ஜோடி
இறக்கைகள்... மேலே கடினக் கவசம்...
போர்க்களத்தில் நிற்கும்
சிறு வீரனைப் போல
நடந்து செல்கிறது வண்டு!



ஹெர்குலிஸ் வண்டு

### 4 வலிமையின் ரகசியம்

உடலைப் பார்த்தால் சிறியது...
ஆனால் வலிமையைப் பார்த்தால்
மலை! தன் உடல் எடையை விட
பல மடங்கு அதிகமான சுமையை
தூக்கும் வண்டுகளின் உலகம்!



சாண வண்டு

### 5 சாண வண்டு – தூய்மைப் பணியாளர்

மனிதன் கழிவு எனப் பார்க்கும்
ஒரு பொருளை...
ஒளிய வாழ்வாகப் பார்க்கிறது!
கழிவை வளமாக்கும்
இயற்கையின் மறுசுழற்சி மன்னன்!



சாண வண்டு

### 6 விவசாயியின் சிறிய காவலன்

பயிரைத் தாக்கும் அசுவினிப் பூச்சி வந்தால்...
பொறி வண்டு போருக்கு வரும்!
விவசாயியின் வயலில்
இயற்கைக் காவலனாக
நிற்கும் சிறிய வீரன்!



பொறி வண்டு

### 7 பொன்வண்டு – இயற்கையின் நகை

தங்கம் பூசியதா? பச்சை மரகதமா?
நீலக் கல் பூசியதா?
இல்லை... இயற்கையின் ஒளி
விளையாட்டில் உருவான
உன் உடலே ஒரு நகை!



பொன்வண்டு

### 8 இருளில் பேசும் ஒளி

காரிருள்... ஒரு சிறிய ஒளிப்புள்ளி
வானில் மின்னுகிறது!
ஒளியே மொழி...
துணையை அழைக்கும்
இயற்கையின் மௌனச் செய்தி!



மின்மினி வண்டு

### 9 எதிரி வந்தால்... எச்சரிக்கை!

பாம்பார்டியர் வண்டு
தன் உடலையே ஒரு ஆயுதமாக்கி
எதிரியை விரட்டுகிறது!
சில வண்டுகள் இறந்தது போல...
சில வண்டுகள் இலைகளாக...
இயற்கையின் பாதுகாப்புத் திட்டம்!



பாம்பார்டியர் வண்டு

### 10 பேசாமல் பேசும் வண்டுகள்

ஒளி, வாசனை, அதிர்வு –
வண்டுகளின் மொழிகள் பல!
வார்த்தையில்லாமல்
உலகம் நடத்தும்
சிறிய உயிர்களே!



சில்வண்டு (கிரிக்கெட்)

### 11 நான்கு நிலைப் பயணம்

முட்டை... புழு... கூட்டுப்புழு...
பின்னர் முழுமையான வண்டாகிறது!
மாற்றம் என்பது முடிவு அல்ல;
புதிய வாழ்க்கையின் தொடக்கம்!



வண்டின் வாழ்க்கைச் சுழற்சி

### 12 இயற்கையே விஞ்ஞானி

வறண்ட பாலைவனத்தில் நீர் சேகரிக்கும்
வண்டு... வலிமையான ஓடு...
மின்மினியின் ஒளி...
பயோமிமிக்ரி தொழில்நுட்பம்...
இயற்கை தான் ஆசிரியர்!



நமிப் வண்டு (நீர் சேகரிப்பு)

### 13 சில்வண்டின் சங்கீதம்

மரத்தின் மேல் மறைந்திருக்கும்
இசைக்கலைஞன்...
ரீங்கார ஒலி...
கோடை மழைக்கு முன்னோடி!
காட்டின் இதயத் துடிப்பு!



சில்வண்டு (Cicada)

### 14 வண்டுகள் சொல்லும் பாடம்

கழிவை வளமாக்கு – சாண வண்டு!
எதிரியை எதிர்கொள் – பாம்பார்டியர் வண்டு!
வயலைக் காப்பாற்று – பொறி வண்டு!
இருளிலும் ஒளி கொடு – மின்மினி!
இயற்கையிடம் கற்றுக்கொள் – வண்டுகள்!



### 15 நிறைவுக் கவிதை – இயற்கையின் சிறிய விஞ்ஞானிகள்

வண்டுகள் வெறும் பூச்சிகள் அல்ல...
அவை இயற்கையின் சிறிய விஞ்ஞானிகள்!
சிறிய உடல்... பெரிய உலகம்...
எண்ணற்ற அதிசயங்கள்!



வண்டுகள் வாழ்க!
இயற்கை வாழ்க!
உயிரினப் பன்மை வாழ்க!
விவசாயம் வாழ்க!
சுற்றுச்சூழல் காக்கப்படுக!
இயற்கையிலிருந்து
அறிவியல் பிறக்கட்டும்!

**“இயற்கை ஒரு புத்தகம்;
வண்டுகள் அதில் எழுதப்பட்டிருக்கும் அற்புதமான அறிவியல் பாடங்கள்!”**

தொகுப்பு : கா. அரிபுத்திரன், எம்.எஸ்.சி. (அக்ரி.)
வேளாண்மை அலுவலர்
உயிரியல் கட்டுப்பாட்டு ஆய்வகம், விருதுநகர்

உங்கள் ஒவ்வொரு செயலிலும் வெளிப்படுகிறது உயிரியல் தத்துவம்! சிறிய உருவம் என்றாலும் சுற்றுச்சூழலில் பெரும் பங்கு வகிப்பவர்களே!

உங்களைப் பாதுகாப்பது உயிரினப் பன்மையைக் காப்பதற்குச் சமமே! சிறிய உடல், பெரிய உலகம் வண்டுகளே இயற்கையின் விஞ்ஞானிகள்!

வண்டுகள் வாழ்க! இயற்கை செழிக்கட்டும்! அறிவியல் வளரட்டும்!

தொகுப்பு : ***கா. அரிபுத்திரன், வேளாண்மை அலுவலர், உயிரியல் கட்டுப்பாட்டு ஆய்வகம், விருதுநகர்,***




# உழவர் உற்பத்தியாளர் நிறுவனத்தைப் பார்வையிட்ட வேளாண் மாணவர்கள்!

திருவாரூர், அக்.10

திருவாரூர் மாவட்டம், நன்னிலம் வட்டாரத்தில், கீழ்வேளூர் வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தைச் சேர்ந்த இறுதியாண்டு வேளாண் மாணவர்கள் , ஊரக வேளாண் பணி அனுபவத் திட்டத்தில் (RAWE) உழவர் உற்பத்தியாளர் நிறுவனத்தை (FPO) பார்வையிடட்டனர்.

இப்பார்வையின்போது, உழவர் உற்பத்தியாளர் நிறுவனத்தின் செயல்பாடுகள், விவசாயிகளின் ஒருங்கிணைப்பு, வேளாண் விளைபொருட்களின் சந்தைப்படுத்தல், மதிப்புக்கூட்டுதல் மற்றும் விவசாயிகளுக்கு வழங்கப்படும் சேவைகள் குறித்து மாணவர்களுக்கு விளக்கமளிக்கப்பட்டது.

மேலும், விளைபொருட்களை நேரடியாகச் சந்தைப்படுத்துவதன் மூலம் விவசாயிகளின் வருமானத்தை அதிகரிப்பதற்கான வழிமுறைகள், வேளாண் இடுபொருட்களைப் பெறுவதற்கான வசதிகள் மற்றும் கூட்டு முயற்சிகளின் முக்கியத்துவம் ஆகியவை எடுத்துரைக்கப்பட்டன. இக்களப்பயணத்தின் மூலம், உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களின் செயல்பாடுகள் மற்றும் விவசாயிகளின் பொருளாதார முன்னேற்றத்தில் அவற்றின் பங்களிப்பு குறித்த நடைமுறை அறிவு மாணவர்களுக்கு வழங்கப்பட்டது.

# வேளாண் கூட்டுறவு கடன் சங்க பணிகளை பார்வையிட்ட வேளாண் கல்லூரி மாணவர்கள்

காஞ்சிபுரம், அக்.10

தொன் போஸ்கோ வேளாண்மைக் கல்லூரியில் AEX 401 கிராமப்புற வேளாண் பணி அனுபவத் திட்டம் பாடத்திட்டத்தின் கீழ், கல்லூரியைச் சேர்ந்த 10 மாணவிகள் 05.10.26 முதல் 14.01.27 வரை காவேரிப்பாக்கம் வட்டாரத்தில் தங்கி, விவசாயிகள் மற்றும் பொதுமக்களுடன் இணைந்து பல்வேறு வேளாண் சார்ந்த செயல்பாடுகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்தத் திட்டத்தின் ஒரு பகுதியாக, 08.10.2026 அன்று மாணவிகள் களத்தூர் வேளாண் கூட்டுறவு கடன் சங்கத்தை நேரில் சந்தித்தனர். அப்போது, கூட்டுறவு சங்கத்தின் செயல்பாடுகள், அதன் அமைப்பு, முக்கியப் பணிகள் மற்றும் பொறுப்புகள் குறித்து விரிவாக அறிந்து கொண்டனர். மேலும், விவசாயிகளுக்கு கூட்டுறவு சங்கங்கள் வழங்கும் சேவைகள், வேளாண் வளர்ச்சியில் அவற்றின் பங்கு மற்றும் கிராமப்புற மக்களின் பொருளாதார முன்னேற்றத்தில் கூட்டுறவு அமைப்புகளின் முக்கியத்துவம் குறித்த பல்வேறு தகவல்களையும் தெரிந்து கொண்டனர்.

இந்தக் கள ஆய்வின்போது வேளாண்மை அலுவலர் (AO) பிரியா மற்றும் வேளாண்மை உதவி இயக்குநர் (AD) சண்முகம் ஆகியோர் உடனிருந்து வழிகாட்டினர். அவர்களின் வழிகாட்டுதலின் கீழ் மாணவர்கள் கூட்டுறவு சங்கத்தின் செயல்பாடுகள் குறித்த நடைமுறை அறிவைப் பெற்றனர்.

கிராமப்புற வேளாண் பணி அனுபவத் திட்டத்தின் மூலம் மாணவிகள் நேரடியாக விவசாயிகளைச் சந்தித்து, பயிர் சாகுபடி முறைகள், பயிர்ப் பாதுகாப்பு, இயற்கை வேளாண்மை, நவீன வேளாண் தொழில்நுட்பங்கள் மற்றும் விவசாயிகள் எதிர்கொள்ளும் நடைமுறைப் பிரச்சினைகள் குறித்து அறிந்துகொள்கின்றனர். மேலும், வேளாண்மைத் துறையுடன் தொடர்புடைய அரசு நிறுவனங்கள் மற்றும் கூட்டுறவு அமைப்புகளின் செயல்பாடுகளை நேரடியாகக் கற்றுக்கொள்வதன் மூலம் தங்களது கள அறிவையும் நடைமுறை அனுபவத்தையும் மேம்படுத்திக் கொள்கின்றனர்.



கிராமப்புற வேளாண் பணி அனுபவத் திட்டத்தில் பங்கேற்கும் மாணவிகளான கவின்மதி. நீ, கனிஷ்கா. செ. மோ, கனிஷ்கா.பா, கீர்த்தி. பு, கௌசல்யா. பா, லாவண்யா. ப, லாவண்யா. ரா, மதுமிதா. மா, மதுமிதா. ரா, மதுமிதா. வி.

விவசாயிகளுடன் இணைந்து கற்றல் கள அனுபவத்தின் மூலம் வேளாண் அறிவை மேம்படுத்துதல் என்ற நோக்கத்துடன் செயல் படுத்தப்படும் இத்திட்டம், மாணவர்களின் நடைமுறைத் திறன்களை மேம்படுத்துவதோடு, விவசாயிகள், கூட்டுறவு அமைப்புகள் மற்றும் வேளாண்மைத் துறையினருக்கு இடையிலான தொடர்பையும் வலுப்படுத்துகிறது. எனவே, அனைத்து விவசாயிகளும் ஒத்துழைப்பு வழங்கி உதவிடுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

Rithvik Pipe

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்

தரச் சான்றிதழ் பேப்பரில் மட்டுமல்ல பைப்பிலும்



## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- 25 ஆண்டுகள் உத்தரவாதம்
  நம்பிக்கைக்கு அடையாளம்
- 100% LEAD-FREE பைப்புகள்
  ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- ISI சான்று பெற்ற பைப்புகள்
  தரத்திற்கு ஒரே அடையாளம்
- ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- 67 GRADE மூலப்பொருட்கள்
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- TEST CERTIFICATE – QR CODE மூலமாக
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- FREE ON-SITE TESTING
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- சரியான எடை, தடிமன்
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

### PRODUCT RANGES

| ISI PVC PIPE - | ASTM UPVC PIPE - | ISI CONDUIT PIPE - | ISI PLUMBING PIPE - | ISI BOREWELL CASING PIPE - |
|---|---|---|---|---|
| 20mm to 250mm (All Classes) | 21mm to 114mm (SCH 40, SCH80) | 16mm to 63mm (Light, Medium, Heavy) | 25mm to 50mm (15KG) | 125mm to 250mm |

PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK

RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW. isha POWERGRID BHEL

Office
Rithvik Pipe Company, Kannaki Street, Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
Rithvik Pipe Company, Opp Kamaraj Colony, R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741

# சங்க இலக்கியங்கள் கூறும் பழந்தமிழரின் வேளாண் பெருமை



சங்க இலக்கியம் தமிழரின் வாழ்வியலை பதிவு செய்த மிகப்பெரிய பண்பாட்டு களஞ்சியம் அதில் பத்துப் பாட்டின் ஒன்பவதாவது நூலான 'பட்டினப்பாலை' சோழன் கரிகாற் பெரு வளத்தானைப் பாடிய கடியலூர் உருத்திரங் கண்ணனாரால் இயற்றப்பட்டது தான் பட்டினப்பாலை கூறும் வேளாண்மையின் சிறப்புகள்.

இதில் வேளாண்மை என்பது ஒரு தொழிலாக சித்தரிக்கப்பட வில்லை. அவர்களின் உயிர் நாடியாக தான் சித்தரிக்கப் பட்டுள்ளது. நீர் வளம், நில வளம் பயிர் தொழில் சாகுபடி, உழைப்பு உணவு உற்பத்தி தொழில் வளர்ச்சி, ஆகிய அனைத்தையும் இணைந்த ஒரு வாழ்வியல் அமைப்பாக சித்தரிக்கப்பட்டுள்ள நூல் தான் 'பட்டினப்பாலை'.

### 1) வேளாண்மையின் வளர்ச்சி

பட்டினப்பாலை முதலில் 'காவிரியின் பெருமையை எடுத்துக் கூறுகிறது. மழை பொய்த்தாலும் காவிரி பொய்க்காது' என்ற கருத்தை மிகச் சிறப்பாக கீழ்க்கண்ட வாறு எடுத்துரைக்கப் பட்டது.

'வான் பொய்ப்பினும் தான் பெய்யாத
மலைத்தலைய கடற்காவிரி '

இங்கு காவிரி வெறும் நதியாக பார்க்க படவில்லை. அதன் நீர் வளத்தால் நாட்டின் வளமும் உழவர்களின் வாழ்வாதாரமும் செழிப்பாக இருக்கும் என்று அந்த வரி கள் உணர்த்துகின்றன.

### 2) இடையுறாத விளைச்சல்

இது பட்டினபாலையின் வேளாண்மையில் மகசூல் சிறப்பை வெளிபடுத்தும் மிக முக்கியமான தொடர்.

'விளைவறா வியன் கழனிக்
கார் கமழ் ஆலை'

இந்த நான்கு சொற்களும் வேளாண்மையில் மகசூல் எடுப்பதை சுருக்கமாக கூறுதல்.

### 3) உணவின் அடித்தளம்

இது வயலின் சிறப்பையும் செழிப்பையும் உணர்த்தும் பாடல்
'காய்ச் செந்நெல் கதிர் அருந்து
மோட்டு எருமை முழுக் குழவி'
இங்கு முக்கியமான வேளாண்மையின் அடிப்படையான நெல் விளைச்சல் பற்றியும் கால்நடை வளர்ப்பை பற்றியும் எடுத்துக்கூறுகிறது.

### 4) தமிழர்களின் பயிரியல் அறிவு

பட்டினப்பாலை ஒரே பயிரை மட்டும் குறிப்பிடாமல் பல பயிர் சாகுபடி முறையை அழகாக எடுத்துரைக்கிறது. அதுவும் சங்க காலத்தில்.
' கோள் தெங்கின் குலை வாழைக்
காய் அழுகின் குமிழ் மஞ்சள்
இன மாவின் இனந் பென்னை
முதற் சேம்பின் முறை இஞ்சி'
என பாடப்பட்டு அதுவும் அந்த காலத்துல பலபயிர் சாகுபடியை உழவர்கள் மேற்கொண்டனர் என்பதை இந்த வரிகள்தெளிவாக கூறுகிறது.

### 5) பொருளாதாரத்தின் அடித்தளம்

பட்டினபாலை காவிரி நகரச் செழிப்பையும் வணிக வளத்தை விவரிக்கிறது. அந்த நகரத்தின் பொருளாதார சூழலில் வேளாண் விளைப் பொருட்களும் முக்கிய இடம் பெற்றுள்ளன. வயலில் தொடங்கி உழைப்பு விளைச்சல் பற்றி தெளிவாக தெரிகிறது.

### இன்றைய தலைமுறைக்கு கூறும் செய்தி

இன்றைய வேளாண்மையில் பல்வேறு மாற்றங்களை எதிர் கொண்டாலும் பட்டினபாலையின் அடிப்படை செய்தி மாற வில்லை.

காவிரியைப் போற்றி சங்கத் தமிழன் நிலத்தைப் போற்றினான். அப்படியே உழவனைப் போற்றினான். நீர் வளமும் வேளாண் உற்பத்தியும் இந்த காலத்து தலை முறைகள் உணர வேண்டும் என்பதை தெள்ளத்தெளிவாக எடுத்து கூறியுள்ளது பட்டினபாலை.

தகவல் : **அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.**

# கிராம தங்கல் திட்ட முகாம் துவக்க விழா



சேலம், அக்.10

சேலம் மாவட்டம், கொங்கணாபுரம் வட்டாரத்தில், குமரகுரு வேளாண்மை கல்லூரியில் வேளாண் பட்டப்படிப்பு படிக்கும் நான்காம் ஆண்டு மாணவர்கள் அ.ரத்தினவேல், க.கமல்நாத், கோ.குணசேகரன், வெ.ஹரிபிரதோஷ், ஆ.சு. சரேந்தர் மற்றும் சு. யுகேஸ்வரன் ஊரக வேளாண் அனுபவ பயிற்சித் திட்டத்தின் மூலம் கிராமத்தில் தங்கி பயிற்சி பெறுவதற்காக வரப்பட்டுள்ளனர்.

இதன் துவக்கமாக, இன்று 06/10/2026 கொங்கணாபுரம் வட்டாரத்தில் உள்ள கச்சுப்பள்ளி கிராமத்தில் துவக்க விழா நடைபெற்றது. இதில் மு.தமிழ்செல்வன், வேளாண்மை உதவி இயக்குனர், து.கௌதமன், வேளாண்மை அலுவலர், இரா.பழனியப்பன், வேளாண்மை இணை இயக்குநர் (ஓய்வு), பா.கனகமணி, வேளாண்மை உதவி பொறியாளர் (வேளாண்மை பொறியியல் துறை), மா.கோகிலா, உதவி வேளாண்மை அலுவலர், மா.சதீஷ் குமார் வட்டார தொழில்நுட்ப மேலாளர், ஹரிஹரசுதன், மற்றும் சிவசக்தி, உதவி தொழில்நுட்ப மேலாளர் ஆகியோர் கலந்து கொண்டு துறை சார்ந்த திட்டங்களை எடுத்துரைத்தனர். இதில் கச்சுப்பள்ளி கிராம விவசாயிகள் கலந்துகொண்டனர். மேலும் க.கமல்நாத் வரவேற்புரை வழங்கி விவசாயிகளுக்கு நெல் சாகுபடி தொழில்நுட்பங்களை விதைப்பு முதல் அறுவடை வரை எடுத்துரைத்தார். துவக்க விழாவை முன்னிட்டு வேளாண்மை உதவி இயக்குநர், கொங்கணாபுரம் விவசாயிகளுக்கு மரக்கன்றுகளை வழங்கினார்.

# பயிர் உற்பத்தி மற்றும் உற்பத்தித்திறன் குறித்த தகவல் சேகரிப்பு

திருவாரூர், அக்.10

இன்றைய களப்பயணத்தின் ஒரு பகுதியாக, திருவாரூர் மாவட்டம், நீடாமங்கலம் வட்டாரத்திற்குட்பட்ட களச்சேரி பகுதிக்கு சென்று, அப்பகுதியின் பயிர் உற்பத்தி நிலவரம் குறித்து ராபுநு திருமூர்த்தி அவர்களிடம் தகவல்கள் கேட்டறிந்தோம். இச்சந்திப்பின்போது, அப்பகுதியில் பயிரிடப்படும் தானியங்கள், சிறுதானியங்கள், பயறு வகைகள், எண்ணெய் வித்துக்கள் மற்றும் வணிகப் பயிர்கள் ஆகிய



வற்றின் பரப்பளவு, உற்பத்தி மற்றும் உற்பத்தித்திறன் தொடர்பான தகவல்கள் குறித்து விரிவாக கேட்டறியப்பட்டது. மேலும், முக்கியமாகப் பயிரிடப்படும் பயிர்கள், அவற்றின் உற்பத்தி நிலவரம் மற்றும் அப்பகுதியின் வேளாண் சூழ்நிலை தொடர்பான பயனுள்ள தகவல்களை VAO திருமூர்த்தி பகிர்ந்து கொண்டார். இச்சந்திப்பு, களச்சேரி பகுதியின் பயிர் உற்பத்தி மற்றும் உற்பத்தித்திறன் நிலவரத்தைப் புரிந்துகொள்ள மிகவும் பயனுள்ளதாக அமைந்தது.



# சூரியக் காற்றுப் பலூன் – ஒரு பார்வை



சூரியக் காற்றுப் பலூன் என்பது சூரிய ஒளியின் மூலம் பலூனுக்குள் உள்ள காற்றை வெப்பப்படுத்தி, அதன் அடர்த்தியைக் குறைத்து, மிதவை விசையின் காரணமாக மேலே எழச் செய்யும் ஒரு சாதனமாகும். இது வழக்கமான சூடான காற்றுப் பலூனைப் போன்றே செயல்பட்டாலும், காற்றை வெப்பப்படுத்த தனியாக எரிபொருளைப் பயன்படுத்தாமல் சூரிய வெப்பத்தைப் பயன்படுத்துவது இதன் முக்கிய சிறப்பம்சமாகும்.

**சூரியக் காற்றுப் பலூனின் செயல்பாட்டுக் கொள்கை**

சூரியக் காற்றுப் பலூனின் அடிப்படை செயல்பாட்டுக் கொள்கை சூரியக் கதிர்வீச்சு மற்றும் மிதவை விசையை அடிப்படையாகக் கொண்டது. பலூனின் வெளிப்புறப் பகுதி பொதுவாக கருப்பு அல்லது அதிக அளவு சூரியக் கதிர்களை உறிஞ்சக்கூடிய பொருளால் தயாரிக்கப்படுகிறது. சூரிய ஒளி பலூனின் மேற்பரப்பில் படும்போது, அது சூரிய வெப்பத்தை உறிஞ்சி பலூனுக்குள் இருக்கும் காற்றை வெப்பப்படுத்துகிறது. வெப்பநிலை அதிகரிக்கும்போது காற்றின் அடர்த்தி குறைகிறது. இதனால் பலூனுக்குள் உள்ள சூடான காற்று, பலூனுக்கு வெளியே உள்ள குளிர்ந்த காற்றைவிட இலகுவாகிறது. வெளியே உள்ள காற்று பலூனை மேல்நோக்கித் தள்ளும் மிதவை விசையை உருவாக்குகிறது. இந்த மிதவை விசை பலூனின் மொத்த எடையைவிட அதிகமாகும் போது, பலூன் தரையிலிருந்து மேலே எழத் தொடங்குகிறது. எளிமையாகக் கூறினால்,

சூரிய ஒளி – காற்று வெப்பமடைதல் – காற்றின் அடர்த்தி குறைதல் – மிதவை விசை அதிகரித்தல் – பலூன் மேலே எழுதல் என்ற வரிசையில் இது செயல்படுகிறது.

**சூரியக் காற்றுப் பலூனின் அமைப்பு**

சூரியக் காற்றுப் பலூனின் முக்கியப் பகுதியாக பெரிய அளவிலான இலகுவான உறை காணப்படுகிறது. இந்த உறை சூரிய வெப்பத்தை உறிஞ்சக்கூடிய பொருளால் தயாரிக்கப்படுகிறது. பொதுவாக கருப்பு நிற பாலித்தீன் போன்ற இலகுவான பொருட்கள் சிறிய அளவிலான மாதிரி பலூன்களுக்கு பயன்படுத்தப்படலாம். பலூனின் கீழ்ப்பகுதி திறந்த நிலையில் இருக்கும்.

இதன் மூலம் வெளிப்புறக் காற்று உள்ளே சென்று சூரிய வெப்பத்தால் சூடாகிறது. பலூனின் கீழ்பகுதியில் கயிறுகள் அல்லது இணைப்புகள் பொருத்தப்பட்டு சிறிய கூடை அல்லது சுமையை இணைக்க முடியும்.

### சூரிய ஆற்றலின் பயன்பாடு

சூரியக் காற்றுப் பலூனில் சூரிய ஆற்றல் நேரடியாக வெப்ப ஆற்றலாக மாற்றப்படுகிறது. சூரிய ஒளி பலூனின் கருமையான மேற்பரப்பில் உறிஞ்சப்பட்டு வெப்பமாக மாறுகிறது. இந்த வெப்பம் பலூனுக்குள் உள்ள காற்றின் வெப்பநிலையை அதிகரிக்கிறது. சூரியக் கதிர்வீச்சின் அளவு அதிகமாக இருக்கும் போது பலூனுக்குள் காற்று வேகமாக வெப்பமடையும். எனவே அதிக சூரிய ஒளி கிடைக்கும் நேரங்களில் பலூன் சிறப்பாகச் செயல்படும். மேகமூட்டமான நாட்கள் அல்லது குறைந்த சூரிய ஒளி கிடைக்கும் நேரங்களில் அதன் செயல்திறன் குறையக்கூடும்.




### சூரியக் காற்றுப் பலூனின் நன்மைகள்

சூரியக் காற்றுப் பலூனின் முக்கிய நன்மை, இது சூரிய ஆற்றலை இலவசமாகப் பயன்படுத்துகிறது என்பதாகும். காற்றை வெப்பப் படுத்த பெட்ரோல், டீசல் அல்லது எரிவாயு போன்ற எரிபொருட்கள் தேவையில்லை. இதனால் எரிபொருள் செலவு குறைகிறது. மேலும், செயல்பாட்டின்போது நேரடியாக புகை அல்லது கார்பன் உமிழ்வு ஏற்படாததால் சுற்றுச்சூழலுக்கு ஒப்பீட்டளவில் ஏற்றதாக உள்ளது. இதன் கட்டுமானக் கொள்கை எளிமையானது என்பதால் பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்களுக்கான அறிவியல் பரிசோதனைகளிலும் இதைப் பயன்படுத்தலாம்.

**பயன்பாடுகள்**

சூரியக் காற்றுப் பலூன் பல்வேறு கல்வி மற்றும் ஆராய்ச்சி நோக்கங்களுக்குப் பயன்படுத்தப்படலாம். குறிப்பாக புதுப்பிக்கத் தக்க எரிசக்தி தொடர்பான அறிவியல் கண்காட்சிகள் மற்றும் மாணவர் திட்டங்களில் இதைப் பயன்படுத்தலாம். சூரிய வெப்பத்தின் தாக்கம், காற்றின் வெப்பநிலை மற்றும் அடர்த்தி மாற்றம் போன்றவற்றை ஆய்வு செய்வதற்கும் இது உதவுகிறது. சிறிய அளவிலான சூரியக் காற்றுப் பலூன்கள் பொழுதுபோக்கு மற்றும் கல்வி நடவடிக்கைகளிலும் பயன்படுத்தப்படுகின்றன. எதிர் காலத்தில் இத்தொழில்நுட்பத்தில் புதிய பொருட்கள் மற்றும் மேம் பட்ட வடிவமைப்புகள் அறிமுகப்படுத்தப்பட்டால், அதிக உயரத்தில் செயல்படும் அறிவியல் ஆய்வுகள் மற்றும் குறைந்த எடை கொண்ட பயன்பாடுகளில் இதன் பங்கு அதிகரிக்க வாய்ப்புள்ளது.

**வரம்புகள்**

சூரியக் காற்றுப் பலூனின் செயல்திறன் சூரிய ஒளியின் அளவைப் பொறுத்தது. இரவு நேரங்களில் சூரிய வெப்பம் கிடைக்காததால் வழக்கமான சூரியக் காற்றுப் பலூன் செயல்படாது. மேலும், பலூனின் எடை அதிகமாக இருந்தால் அதை மேலே எழுப்ப அதிக மிதவை விசை தேவைப்படும். இதனால் பலூன் தயாரிக்கப் பயன்படுத்தப்படும் பொருள் மிகவும் இலகுவாக இருக்க வேண்டும். பலத்த காற்று மற்றும் மழை போன்ற வானிலை நிலைகளும் பலூனின் செயல்பாட்டைப் பாதிக்கின்றன. எனவே இதனைப் பயன்படுத்தும்போது பாதுகாப்பான இடம் மற்றும் பொருத்தமான வானிலை நிலை அவசியமாகும்.

**முடிவுரை**

எரிபொருள் தேவையில்லாமல் சூரிய வெப்பத்தைப் பயன்படுத்துவதால் இது புதுப்பிக்கத்தக்க ஆற்றல் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் ஒரு சிறந்த கல்வி மாதிரியாக விளங்குகிறது. மாணவர்கள் மற்றும் ஆராய்ச்சியாளர்கள் சூரிய ஆற்றலின் பல்வேறு பயன்பாடுகளைப் புரிந்துகொள்ள இது பயனுள்ளதாக இருக்கும். எதிர்காலத்தில் இத்தொழில்நுட்பத்தில் மேலும் ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டால், சூரிய வெப்ப ஆற்றலைப் பயன்படுத்தும் புதிய மற்றும் சுற்றுச்சூழலுக்கு ஏற்ற சாதனங்களின் வளர்ச்சிக்கு இது வழிவகுக்கும்.

கட்டுரை ஆசிரியர் : ***Er.S.சுகுமார் M.E., உதவி பேராசிரியர், வேளாண்மைப் பொறியியல் துறை, நாளந்தா வேளாண்மைக் கல்லூரி, திருச்சி. மின்னஞ்சல் : sukumarsubramani2002@gmail.com***



Rithvik Pipe

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- 25 ஆண்டுகள் உத்தரவாதம்
  நம்பிக்கைக்கு அடையாளம்
- 100% LEAD-FREE பைப்புகள்
  ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- ISI சான்று பெற்ற பைப்புகள்
  தரத்திற்கு ஒரே அடையாளம்
- ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- 67 GRADE மூலப்பொருட்கள்
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- TEST CERTIFICATE – QR CODE மூலமாக ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- FREE ON-SITE TESTING
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- சரியான எடை, தடிமன்
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

## PRODUCT RANGES

| | | | | |
|---|---|---|---|---|
| ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes) | ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80) | ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy) | ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG) | ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm |

PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK

## RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW isha POWERGRID BHEL

Office
**Rithvik Pipe Company**, Kannaki Street,
Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
**Rithvik Pipe Company**, Opp Kamaraj Colony,
R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741

# நீடாமங்கலத்தில் வேளாண் மாணவர்களின் களப்பயணம்

திருவாரூர், அக்.10




திருவாரூர் மாவட்டம், நீடாமங்கலத்தில் செயல்பட்டு வரும் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கம் லிமிடெட்டை வேளாண் கல்லூரி மாணவர்கள் பார்வையிட்டனர். இப்பார்வையின் முக்கிய நோக்கம், கிராமப்புறங்களில் பால் உற்பத்தி மற்றும் கொள்முதல் நடைபெறும் விதம், பாலின் தரத்தை மதிப்பீடு செய்யும் முறைகள், குளிரூட்டுதல், பதிவு செய்தல் மற்றும் நுகர்வோருக்கு விநியோகம் செய்யப்படும் நடைமுறைகள் குறித்து நேரடியாக அறிந்து கொள்வதாகும்.

நீடாமங்கலம் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கம், கிராமப்புற பால் உற்பத்தியாளர்களையும் நுகர்வோரையும் இணைக்கும் முக்கியமான கூட்டுறவு அமைப்பாக செயல்பட்டு வருகிறது. இச்சங்கம் தஞ்சாவூர் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்தின் கீழ் செயல்படுவதுடன், தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம் மற்றும் மயிலாடுதுறை மாவட்டங்களை உள்ளடக்கிய பால் கூட்டுறவு அமைப்பின் ஒரு பகுதியாக உள்ளது. மேலும், மாநில அளவில் தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் இணையம் (ஆவின்) அமைப்புடன் இணைந்து செயல்படுகிறது.

கிராமங்களில் உள்ள பால் உற்பத்தியாளர்கள் தங்களது கால்நடைகளிலிருந்து பாலை கறந்து வழங்குவதன் மூலம் பால் சேகரிக்கப்படுகிறது. பின்னர், சங்கத்தின் பால் சேகரிப்பாளர்கள் அல்லது விற்பனையாளர்கள் கிராமங்களுக்குச் சென்று விவசாயிகளிடமிருந்து பாலை சேகரித்து சங்கத்தின் மையத்திற்கு கொண்டு வருகின்றனர்.

சங்கத்திற்கு கொண்டு வரப்படும் பால் முதலில் அளவிடப்பட்டு, அதன் அளவு மற்றும் தரம் தொடர்பான விவரங்கள் பதிவு செய்யப்படுகின்றன. சேகரிக்கப்பட்ட பாலின் அளவு முறையாக கணக்கிடப்பட்டு, தேவையான விவரங்கள் கணினி அமைப்பில் பதிவு செய்யப்பட்டு ஆவின் நிர்வாகத்திற்கு அனுப்பப்படுகின்றன.

**பாலின் தரப் பரிசோதனை**

பால் கொள்முதல் செய்யும் போது அதன் தரத்தை உறுதி செய்வதற்காக பல்வேறு பரிசோதனைகள் மேற்கொள்ளப்படுகின்றன. பாலின் அடர்த்தியை அறிய லாக்டோமீட்டர் (Lactometer) பயன்படுத்தப்படுகிறது. பொதுவாக காலை நேரத்தில் லாக்டோமீட்டர் அளவீடு சுமார் 27 ஆகவும், பிற நேரங்களில் சுமார் 28 ஆகவும் இருக்கலாம் என மாணவர்களுக்கு விளக்கப்பட்டது.

மேலும், பாலில் உள்ள கொழுப்புச் சத்து (Fat Percentage) இயந்திரத்தின் மூலம் பரிசோதிக்கப்படுகிறது. பாலின் தன்மைக்கு ஏற்ப கொழுப்புச் சத்து சுமார் 4% முதல் 8% வரை இருக்கக்கூடும். இதன் மூலம் பாலின் தரத்தை மதிப்பீடு செய்து அதற்கேற்ப கொள்முதல் மற்றும் விலை நிர்ணயம் செய்யப்படுகிறது.

**Gerber முறையில் கொழுப்புச் சத்து பரிசோதனை**

இயந்திரம் பயன்படுத்த முடியாத சூழ்நிலையில், பாரம்பரியமாகப் பயன்படுத்தப்பட்டு வரும் Gerber பரிசோதனை முறை பயன்படுத்தப்படுகிறது. இம்முறையில் குறிப்பிட்ட அளவு பால் மற்றும் தேவையான வேதிப்பொருட்கள் சேர்க்கப்பட்டு, குறிப்பிட்ட வெப்ப நிலையில் சூடேற்றப்பட்டு, பாலில் உள்ள கொழுப்பின் அளவு கணக்கிடப்படுகிறது.

இத்தகைய பாரம்பரிய பரிசோதனை முறைகள் நவீன இயந்திர வசதிகள் இல்லாத காலத்தில் பாலின் தரத்தை மதிப்பிடுவதில் முக்கிய பங்கு வகித்துள்ளன. இதன் செயல்முறை குறித்தும் மாணவர்கள் நேரடியாக அறிந்து கொண்டனர்.

**பால் குளிரூட்டுதல் மற்றும் பாதுகாப்பு**

தரப் பரிசோதனை முடிந்த பிறகு, சேகரிக்கப்பட்ட பால் சுமார் 4ஏளீ வெப்பநிலையில் குளிரூட்டப்படுகிறது. பாலின் தரம் மற்றும் பாதுகாப்பை பராமரிப்பதில் குளிரூட்டுதல் முக்கியப் பங்கு வகிக்கிறது. குறைந்த வெப்பநிலையில் பாலைப் பாதுகாப்பதன் மூலம் அதன் தரத்தை பராமரித்து, அடுத்தடுத்த செயல்முறைகளுக்கு கொண்டு செல்ல முடிகிறது.

**பால் விற்பனை மற்றும் விநியோகம்**

சங்கத்தின் மூலம் பொதுமக்களின் தேவைக்கேற்ப பல்வேறு அளவுகளில் பால் விற்பனை செய்யப்படுகிறது. ரொக்க விற்பனையில் ஒரு லிட்டர் பால் ரூ.54.00 என்ற விலையிலும், அரை லிட்டர் ரூ.27.00 என்ற விலையிலும் விற்பனை செய்யப் படுகிறது. இதேபோல் 400 மில்லி, 300 மில்லி, 200 மில்லி மற்றும் 100 மில்லி அளவுகளிலும் பால் விற்பனை செய்யப்படுகிறது.

**பால் அளவு ரொக்க விற்பனை விலை**

1 லிட்டர் – ரூ.54.00, ½ லிட்டர் – ரூ.27.00, 400 மில்லி – ரூ.21.60, 300 மில்லி – ரூ.16.20, 200 மில்லி – ரூ.10.40, 100 மில்லி – ரூ.5.40.

**பால் அட்டை விற்பனை :** 1 லிட்டர் – ரூ.53.00

பால் தேவைக்கேற்ப பைகள் அல்லது பாட்டில்களில் நிரப்பப்பட்டு நுகர்வோருக்கு விநியோகிக்கப்படுகிறது. இதன் மூலம் உள்ளூர் மக்களுக்கு தரமான பால் எளிதாகக் கிடைக்கிறது.

**பால் உற்பத்தியாளர்களுக்கான ஆதரவு**

கூட்டுறவு சங்கத்தின் முக்கிய நோக்கங்களில் ஒன்று உள்ளூர் பால் உற்பத்தியாளர்களுக்கு ஆதரவளிப்பதாகும். விவசாயிகளிட மிருந்து நேரடியாக பால் கொள்முதல் செய்யப்படுவதால், அவர்களுக்கு முறையான கொள்முதல் வாய்ப்பும் அதற்கான பணப்பலனும் கிடைக்கிறது. மேலும், பால் உற்பத்தியை மேம் படுத்தும் வகையில் கால்நடைத் தீவனம் வழங்குதல் மற்றும் உள்ளூர் கால்நடை மருத்துவ உதவி போன்ற சேவைகளும் வழங்கப்படுகின்றன. இதன் மூலம் பால் உற்பத்தியாளர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதில் கூட்டுறவு சங்கம் முக்கிய பங்காற்றுகிறது.

**மாணவர்களின் களப்பயண அனுபவம்**

இந்தக் களப்பயணத்தின் போது வேளாண் கல்லூரி மாணவர்கள், வகுப்பறையில் கற்றுக்கொண்ட பால் உற்பத்தி மற்றும் தரப் பரிசோதனை தொடர்பான கோட்பாடுகளை நேரடியாக செயல் முறையுடன் தொடர்புபடுத்திக் கொள்ளும் வாய்ப்பைப் பெற்றனர். பால் சேகரிப்பு, அளவீடு, லாக்டோமீட்டர் மூலம் அடர்த்தி பரிசோதனை, கொழுப்புச் சத்து மதிப்பீடு, குளிரூட்டுதல், பதிவு செய்தல் மற்றும் விற்பனை போன்ற பல்வேறு நிலைகளைப் பற்றி மாணவர்கள் தெளிவாக அறிந்து கொண்டனர்.

**முடிவுரை :** நீடாமங்கலம் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கத்தின் பார்வையிடல், கிராமப்புற பால் உற்பத்தியாளர்கள் முதல் இறுதி நுகர்வோர் வரை நடைபெறும் பால் கூட்டுறவு அமைப்பின் செயல்பாடுகளைப் புரிந்துகொள்ள மாணவர்களுக்கு பயனுள்ள கள அனுபவமாக அமைந்தது. குறிப்பாக, பாலின் தரத்தை உறுதி செய்வதில் மேற்கொள்ளப்படும் பரிசோதனைகள், குளிரூட்டும் நடைமுறைகள் மற்றும் கூட்டுறவு சங்கத்தின் மூலம் விவசாயி களுக்கு வழங்கப்படும் ஆதரவு சேவைகள் குறித்து மாணவர்கள் நடைமுறை அறிவைப் பெற்றனர். மாவு அரவைச்சாலையையும் மாணவிகள் ஆய்வு செய்தனர்.

# தேனீ வளர்ப்பு குறித்த விவசாயிகள் கண்டுணர் பயணம்

மதுரை, அக்.10

தேனீக்கள் ஆறுகால்கள் (Hexapoda) கொண்ட பறக்கும் சிறு பூச்சி இனத்தில் ஒன்றாகும். இவை பூவில் இருந்து பூந்தேனை உறிஞ்சி சேகரித்துத் தேனடையில் தேனாகச் சேகரித்து வைக்கின்றன. இவை ஈ பேரினத்தில் ஒரு வகை ஆகும். ஈ பேரினத்தில் இன்று ஏறத்தாழ 20,000 வகைகள் அறியப்பட்டுள்ளன. அவற்றுள் ஏழு இனங்கள்



தான் தேனீக்கள் ஆகும். இந்தத் தேனீக்களில் மொத்தம் 44 உள்ளினங்கள் உள்ளன. அறிவியலில் தேனீக்கள் ஏபிடே (Apidae) என்னும் குடும்பத்தில், ஏபிசு (Apis) என்னும் பேரினத்தைச் சேர்ந்தவை.தேனீக்கள் பெருங்கூட்டமாகத் தேனடை என்னும் ஆயிரக்கணக்கான அறுகோண அறைகள் கொண்ட கூடு கட்டி, அதில் தேனைச் சேகரித்து வாழ்கின்றன். தேனீக்கள் தமது உடலில் இருந்து வெளியேற்றும் மெழுகால் இந்தக் கூடுகள் அமைக்கப்படுகின்றன.



தேனீக்கள் ஏறக்குறைய ஒரு இலட்சம் கிலோ மீட்டர் வரை பயணிக்கும் திறனைக் கொண்டதாகும். தேனீக்கள் ஏன் தேனைச் சேமித்து வைக் கின்றன. என்ற கேள்விக்கு விடை தேடிச் சென்றால் நமக்குக் கிடைக்கும் பதில் மலர்கள் பூக்காத உணவு உற்பத்திக்கு வழியே இல்லாத குளிர் காலத்திற்காக இவைகளால் முன் கூட்டியே சேகரிக்கப்படும் பாதுகாப்பு நடவடிக்கை தான் தேன் சேகரிப்பு ஆகும். தேனீக்கள் மணிக்கு 40 கிலோ மீட்டர் வேகத்தில் பறக்கும் ஆற்றல் பெற்றதாகும். ஒரு வருடத்தில் இவைகளினால் கூட்டிற்கு 450 கிலோ எடையுடைய மலரின் குளுகோஸ், மரங்களிலிருந்து கொண்டு வரப்படும் புரொபோலிஸ் என்னும் பிசின், நீர் மற்றும் மகரந்தம் கொண்டு வரப்படுகின்றன என்று சொன்னால் ஒரு கூட்டில் வேலைக்காரத் தேனீக்களின் பங்களிப்பு என்னவென்பதை நம்மால் உணர முடிகின்றது. இவை இவ்வளவு தொலைவிலிருந்து சேகரித்து வரும் மலரின் குளுகோஸ் ஏறக்குறைய ஒரு பவுன்டு எடையுடைய தேனை உற்பத்தி செய்ய போதுமானதாகும். இவை முதலில் கூட்டை விட்டு வெளியில் சென்று மலர்களின் உள்ளே இருக்கும் மலரின் மதுவை (nectar) உறிஞ்சி உட்கொள்கின்றன. பின்னர் மலரின் மகரந்தத்தையும் சேகரித்துத் திரும்பி கூட்டிற்கு வருகின்றன. திரும்பிய உடன் மகரந் தத் தூளை நேரடியாக அறைக் கூட்டில் இட்டு சீல் வைக்கின்றன. இந்த மகரந்தத் தூள் நிறைய புரதம் மற்றும் தாதுப் பொருட்கள் நிறைந்ததாகும். மேலும் இவற்றில் 10-க்கும் மேற்பட்ட அமினோ அமிலங்கள் உள்ளன. இதைத் தேனுடன் கலந்து லார்வாக்களுக்கு கொடுக்கின்றன. பின் கூட்டை பராமரிக்கும் தேனீக்களின் வாயில் இவை வயிற்றிலிருந்து வெளிகொணர்ந்த தேனைக் கொடுக் கின்றன. இவை ஒரு துளி தேனை வெளியேற்ற 50 முறை வயிற்றி லிருந்து கக்குகின்றன. இவை வெளியில் ஏதேனும் புதிய மலர் பகுதிகள் கண்டுபிடிக்கப்பட்டால் அவற்றைத் துல்லியமாக ஒரு வித்தியாசமான நடன அசைவின் மூலம் மற்ற தேனீக்களுக்குத் தெரிவிக்கின்றன.

இத்தகைய முக்கியத்துவம் வாய்ந்த தேனீ வளர்ப்பின் முக்கியத் துவத்தை உணர்த்துவதற்காக மதுரை மாவட்டம், மதுரை மேற்கு வட்டார வேளாண்மைத்துறை வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை (ATMA) திட்டம் மூலம் 09.10.26 அன்று HAWA VALLEY உள்ள BEE CLUB நிறுவனத்தில் தேனீ வளர்ப்பு குறித்த மாவட்ட அளவிலான விவசாயிகள் கண்டுணர் பயண மானது 50 முன்னோடி விவசாயிகளைக் கொண்டு மேற்கொள்ளப் பட்டது. இப்பயணத்தில் கலந்து கொண்ட விவசாயிகளுக்கு தொழில் நுட்ப உரை வழங்குவதற்கு Bee Club-ன் நிறுவனர் பீம்சிங், தேனீக் களின் வகைகள், தேன் சேகரிக்கும் முறைகள், தேனீ பெட்டிகளை பாதுகாப்பாக கையாளும் வழிமுறைகள், தேன் சேகரிப்பு கருவிகள் மற்றும் தேனீலிருந்து மதிப்பு கூட்டும் பொருட்கள் பற்றி விவரித்தார். பயணத்திற்கான ஏற்பாடுகளை உதவி வேளாண்மை அலுவலர்கள் கதிரவன் மற்றும் பிரபு, ATMA திட்ட பணியாளர்கள் வட்டார தொழில் நுட்ப மேலாளர் ராஜசேகர், உதவி தொழில்நுட்ப மேலாளர்கள் பாலமுருகன் மற்றும் ஸ்ரீஹரிணி ஆகியோர் செய்திருந்தனர்.

# விவசாயிகளுடன் கலந்துரையாடிய வேளாண் கல்லூரி மாணவர்கள்



நாகப்பட்டினம், அக்.10

நாகை மாவட்டம், கீழ்வேளூர் வேளாண்மை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தைச் சேர்ந்த வேளாண் மாணவர்கள், கிராமப்புற வேளாண் பணி அனுபவத் திட்டத்தின் கீழ் திருத் துறைப்பூண்டி வட்டாரத்தில் விவசாயிகளை நேரில் சந்தித்து கலந்துரையாடினர். இச்சந்திப்பின் போது, விவசாயிகளிடம் பயிர் சாகுபடி முறைகள், பயிர் வகைகள், பயிர் சுழற்சி, பாசன ஆதாரங்கள் மற்றும் தற்போதைய சாகுபடி நிலவரம் குறித்து மாணவர்கள் கேட்டறிந் தனர். மேலும், விவசாயிகள் எதிர்கொள்ளும் நீர்ப்பற்றாக்குறை, பூச்சி மற்றும் நோய் தாக்குதல், சாகுபடி செலவு, தொழிலாளர் பற்றாக்குறை மற்றும் சந்தைப்படுத்தல் பிரச்சினைகள் குறித்தும் மாணவர்கள் அறிந்து கொண்டனர். இத்திட்டத்தின் ஒரு பகுதியாக, மாணவர்கள் 60 நாட்கள் விவசாயிகளுடன் நேரடியாக தொடர்பு கொண்டு, அவர்களின் வேளாண் நடைமுறைகள், தேவைகள் மற்றும் களத்தில் நிலவும் பிரச்சினைகளை தொடர்ந்து அறிந்து கொள்ள உள்ளனர். இதன் மூலம் விவசாயிகளின் தேவைகளுக்கு ஏற்ப நவீன வேளாண் தொழில்நுட்பங்கள் மற்றும் தொழில்நுட்ப வழிகாட்டுதல்களை வழங்குவதற்கான நடைமுறை அனுபவத்தை மாணவர்கள் பெறுகின்றனர். விவசாயிகளுடன் நேரடி கலந்துரை யாடலுடன் மாணவர்களின் 60 நாட்கள் கிராமப்புற வேளாண் பணி அனுபவத் திட்டத்தின் களப்பணி தொடங்கியது.

கல்யாண்
ஜுவல்லர்ஸ்



Toll Free No. 1800 - 4257333